முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி.. | 12.02.2026 | சாட்சி.. | பி.வா.சா.1 |
| பெயர்.. | ஶ்ரீராமன் | வயது.. | 75 |
| தந்தை பெயர்.. | ரெங்கநாதன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

7. வழக்கு சொத்து கீழ்மேல் 47 அடி, தென்வடல் 87 அடி என்றால் சரிதான். அது தான் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னை 18.10.1986 இல் சங்கத்தில் தலைவராக தேர்ந்தெடுத்தார்கள், அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அவை மேற்குறிப்பிட்ட படி திருடபட்டுவிட்டது. அந்த சமயத்தில் வேறு யார் யார் பொருப்பில் இருந்தார்கள் தில்லை கோவிந்தன் செயலாளர், துணை தலைவர் ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் கார்த்திகேயன் பொருப்பில் இருந்தார்கள், அப்போது Resolution இல் 26 பேர் கலந்து கொண்டார்கள். எனது தகப்பனார் இறந்த சமயத்தில் நான் தலைவராக பொருப்பேற்ற போது சங்கம் பதிவு செய்யப்படவில்லை. புவனகிரி வர்த்த சங்கம் 29/1976 இல் பதிவு செய்யப்பட்டிருந்ததா என்றால் பதிவு செய்யப்பட்டிருந்தது பின்னிட்டு 1986 இல் கலைக்கப்பட்டது.

8. நான் 1986 இல் இருந்து தலைவராக இருக்கிறேன். எனது தகப்பனாருக்கு பிறகு நான் தான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் Resolution meeting ஜெயராமன் தலைமையில் நடந்தது. எனது தகப்பனார் இறக்கும்போது 78 வயது ஆகும். எனது தகப்பனார் 18.10.1985 இல் இறந்தார். எனது தகப்பனார் இருக்கும் காலத்திலேயே தலைவராக இருக்கும் போது Resolution board இல் நீக்கினார் கள் என்றால் 27.7.1975 இல் தீர்மானம் போட்டார்கள் ஆனால் தீர்மானத்தின் படி நீக்கபடவில்லை, 1978 வரை எனது தகப்பனார் தான் தலைவராக இருந்தார். 1975 க்கு பிறகு எனது தந்தை நிர்வாகம் செய்ததற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால்

வரவு செலவு கணக்கு இருந்தது அதை திருடி சென்று விட்டார்கள். பி.சா.ஆ.1 முதல் 3 வரை எனது சங்கத்தை சேர்ந்த பழைய ஆவணங்கள் என்றால் சரிதான்.அந்த ஆவணங்கள் 10.11.2010-இல் அனைத்து ஆவணங்களையும் திருடிவிட்டு சென்றார்கள். திருடி சென்றவர்கள் வாதி சங்க தலைவர், செயலாளர் உள்ளிட்ட 10 பேர் திருடி சென்றுவிட்டார்கள். அதன் பேரில் நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை புகார் கொடுக்கப்பட்டு CSR கொடுத்தை, தாக்கல் செய்திருக்கிறேன் அதன் பேரில் நடவடிக்கை எதுவும் எடுக்கபடவில்லை.

9. புகாரில் அலுவலகத்தில் இருக்கும் ஆவணங்கள் எடுத்து சென்று விட்டதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன் சங்கம் கட்ட வைத்திருந்த இரண்டு அருகால், ஜன்னல்களை திருடி விட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன். சம்பவம் நடக்கும் போது நான் கேள்விபட்டு வந்து தடுத்தேன். என்னுடைய press யை தாக்கினார்களா என்றால் இல்லை, 127/C1 இல் வர்த்தக சங்கத்தில் இருந்து மேற்சொன்ன ஆவணங்கள் எடுத்து சென்றுவிட்டார்கள். நீதிமனத்தில் தாக்கல் செய்த பழைய ஆவணங்களை எங்கு வைத்திருந்தேன் என்றால் வீட்டில் வைத்திருந்தேன். 05.03.1985 இல் 167E press யை உடைத்தார்கள், அதற்கு நஷ்டஈடு கேட்டு தான் OS.17/1985 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யபட்டுவிட்டது. 1985 இல் பூட்டை உடைத்த சமயத்தில் நான் அந்த இடத்தில் இல்லை. 1985 இல் கடைக்கு பின்புறம் வீடு கட்டபட்டிருந்ததா என்றால் வீடு கட்டபட்டிருந்தது toilet இல்லாததால் பக்கத்து கொத்த தெருவில் வசித்து வந்தேன்.

10. அப்போது 1985 நிகழ்வு நடக்கும் போது 70, மெயின் ரோடு, கீழ்புவனகிரியில் வசித்தேனா என்றால் இல்லை கொத்த தெருவில் வசித்தேன். வழக்கு சொத்து கட்டிடம் தரைதளம் மட்டும் தான் மேல்தளம் இல்லை, 18/8 இல் ஒட்டி இருந்தது. முன்புறம் இருக்கும் கடைகள் madras ஓடு போட்டிருந்தது. 167/E க்கு பின்புறம் சொந்தமமன இடத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான் வீடை சுற்றிய பகுதி காலிமனை என்றால் சரிதான். மற்ற கடைகள் என் வீடு வரை நீட்டபடவில்லை என்றால் 167/B மட்டும் எனது வீடு வரை பின்புறம் நீட்டி இருந்தது. வழக்கு சொத்தில் கிழக்கில் 2 கடை, மேற்கில் 2 கடை நடுவில் மண்டபம் இருந்தது என்றால் சரிதான். மண்டபம் 167C/1. மேற்புறம் 167/B. அதற்கு அடுத்து 167/C. அதற்கு பிறகு மண்டபம் அதற்கு பிறகு 167 /D. 167/E/ 167/A, 167/B க்கு பின் உள்ளது. 167/ E மொத்த சொத்தில் கீழ்புரம் உள்ளது.

11. 47/87 சொத்து புவனகிரி வர்த்தக சங்கத்திற்கு பாத்தியமானது. வீட்டு வரி, குடிநீர் இணைப்பு, மின்சார இணைப்பு ரசீதுகள் எனது தந்தை பெயரிலும் பின்னிட்டு என் பெயரிலும் இருக்கிறது. சங்கத்தின் பெயரில் ஏன் இல்லை என்றால் சங்கத்தின் பெயரில் தான் மேற்சொன்ன இணைப்புகள் இருக்கிறது எங்கள் பெயரில் ரசீதுகள் கட்டடப்பட்டு வந்தது. 1985 க்கு பிறகு மாசிமக உற்சவம் எனது தந்தை இறக்கும் வரை நடத்திவந்தார். அதற்கான ஆவணங்கள் தான் திருடப்பட்டு விட்டன. சாதாரணமாக உற்சவம் செய்வதற்கு ஸ்ரீமுஷ்ணம் தேவஸ்தானத்தில் அனுமதி பெற்று நடத்துவது வழக்கம் என்றால் சரியல்ல, 1895 இல் இருந்து பரம்பரையாக நடத்தி வருகிறோம். மேற்சொன்னது வழக்கிற்காக பொய் என்றாலும் நாங்கள் சங்கத்திற்கு பொருப்பில் வந்தது 1958 இல் இருந்து தான் என்று சொன்னால் சரியல்ல.

12. வாதிகள் மாசிமக உற்சவம் செய்வதில்லை என்றால் சரிதான். அவர்கள் செய்ததாக பத்திரிக்கை போட்டிருக்கிறார்கள் என்றாலும், அதை பற்றி ஸ்ரீமுஷ்ணத்தில் விசாரித்தேனா என்றால் அவை பொய்யானவை, நாங்கள் ஸ்ரீமுஷ்ணத்தில் விசாரிக்க அவசியமில்லை. கடைக்கும் வீட்டிற்கும் வாடகை கொடுக்காதது குறித்து சங்கத்தில் தீர்மானம் போடப்படவில்லை. சங்கம் கணக்கில் 167/ E வாடகைதாரர் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது 167/E தவிர மற்றவை வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் சங்கம் சார்பாக கட்டிடம் செய்வதற்கு ஏற்பாடு செய்தோம் எப்போது என்றால் 2010 ஏற்பாடு செய்தோம். ஏன் கட்டிடம் கட்டவில்லை என்றால் 13.10.2010 இல் தீர்மானம் செய்யும் போது வாதிகள்காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நிறுத்திவிட்டார்கள். என்னுடைய சங்கம் பூராசாமி வர்த்தக சங்கம் புவனகிரி என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. புவனகிரி வர்த்தக சங்கம் நடுத்துவதாக சொல்வது பொய் என்றாலும் எங்கள் சங்கத்திற்கும், புவனகிரி வர்த்தக சங்கம் புவனகிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. OS.165/2004 சாட்சியத்தில் வாதி தரப்பில் பக்கம் 7 பிரமாண வாக்குமூலத்தில் எதிரி சங்கத்தினார் என்னிடத்தில் வர்த்தக சங்க பொருப்பு,, பட்டா இருப்பதாக ஒப்புகொண்டுள்ளார்கள். எனது சங்கம் 38/2003 இல் பதிவு செய்யப்பட்டதாகும். அதற்கு வருடா வருடம் வரவு செலவு கணக்கு கொடுத்து இயங்கி வருகிறது என்றால் சரிதான். எனது சங்கத்திற்கு bye law புத்தகம் உள்ளது அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். வாதிகள் சங்கம் 2003 இல்

பதியப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வாதிகள் சங்கம் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டு பிறகு 38/2003 என்று எனது சங்கத்தை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.